

கர்த்தருக்கு கோபம் மூட்டாதே
Provoke Not
the Lord to Anger
Album 21 Song 1

கர்த்தருக்கு கோபம் மூட்டாதே Fri 27 APR '07

78 சங்கீதம்

கர்த்தருக்கு கோபம் மூட்டாதே
தேவனைப் பரீட்சைப் பார்க்காதே
கர்த்தரின் சாட்சிகளை கைக்கொள்ளாமற் போகாதே
விக்கிரகங்களினால் தேவனுக்கு எரிச்சல் உண்டாக்காதே

இவற்றைக் கேட்காதே போனால்
தேவன் உக்கிரமாகி
உன்னை மிகவும் வெறுத்திடுவார்
தமது கூடாரத்தை விட்டு விலகிடுவார் (கர்த்தருக்கு)

இவற்றைக் கேட்காதே போனால்
சிறையிருப்புக்குத் திருப்பி
உன்னை சத்துருவின் கைக்கு ஒப்புக்கொடுப்பார்
பகைஞரின் கைக்கும் ஒப்புக்கொடுப்பார் (கர்த்தருக்கு)

இவற்றைக் கேட்காதே போனால்
பட்டயத்துக்கு இரையாக்கி
தமது சுதந்தரத்தின் மேல் கோபங்கொள்வார்
தமது ஜனத்தின் மேலும் சினங்கொள்வார் (கர்த்தருக்கு)

இவற்றைக் கேட்காதே போனால்
மரணத்திற்கு திருப்பி
வாலிபரை அக்கினியால் பட்சித்திடுவார்
கன்னியாஸ்திரிகளுக்கோ வாழ்க்கை [illegible] (கர்த்தருக்கு)

இவற்றைக் கேட்காதே போனால்
போர்களத்திற்கு அனுப்பி
ஆசாரியர்களை பட்டயத்தால் விழச்செய்வார்
அவர்களின் விதவைகளை அழ விடமாட்டார் (கர்த்தருக்கு)

God may forgive your sins but your nervous system won't.

